District Munsif Court, Palani.
I.A.No.1/24 in O.S.78/2024

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: செல்வி. சு. அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24 ஆம் நாள் திங்கள்கிழமை**

**இ.ம.எண்.1/2024**

**இன்**

**அ.வ.எண்.78/2024**

இளவர்.கபிலரசு
(இளவர் வாதிக்கு பாட்டியும், அடுத்த
சிநேகிதியுமான மாரியம்மாள் மூலம்) ....மனுதாரர்/வாதி

// எதிர் //

கார்த்திகேயன் ....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் **திரு.S.சங்கர், B.A.,B.L.,** ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் **திரு.S.பாலமுருகன், B.A.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இறுதி விசாரணைக்காக 23.06.2025 ஆம் தேதி வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் இளவர் மனுதாரர்/வாதி கபிலரசு 5 வயதுள்ள இளவர் என்பதால் அவரை பராமரித்து வரும் அவரது பாட்டியான மாரியம்மாள் என்பவரையோ அல்லது ஒரு நீதிமன்றம் மூலம் நியமனம் பெற்றவரையோ இளவருக்கு அடுத்த நண்பராக நியமனம் செய்ய உத்திரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் **கட்டளை 32 விதி 1 மற்றும் பிரிவு 151ன்** படி – தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்**

2.1. மனுதாரர் இந்த மனுவில் இளவர் மனுதாரர்/இளவர் வாதிக்கு பாட்டியும், அடுத்த நண்பர் ஆவார் என்றும், இந்த பிரமாண வாக்குமூலத்தை இளவர் மனுதாரர்/இளவர் வாதிக்காகவும் சேர்ந்து தாக்கல் செய்கிறார் என்றும், மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்திருக்கும் பிராதினை இந்த மனுவின் ஓர் அங்கமாய் வாசித்துகொள்ள வேண்டும் என்றும், இளவர் மனுதாரர்/வாதி கடந்த 15.02.2019 ம் தேதி இறந்து போன நித்யா மற்றும் பிரதிவாதிக்கும் பிறந்த மகன் ஆவார் என்றும், மேற்படி இளவர் மனுதாரர்/வாதி தன்னுடன் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறார் என்றும், இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் இறந்து போன நித்யாவிற்கும், பிரதிவாதிக்கும் இந்து முறைப்படி கடந்த 29.11.2017 ஆம் தேதி திருமணம் நடைபெற்ற பின்பு ஓரிரு மாதங்கள் பிரதிவாதியின் முகவரியில் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தனர் என்றும் திருமணத்தின் பயனாக இளவர் மனுதாரர்/வாதி கடந்த 15.02.2019 ஆம் தேதி பிறந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2. அதனை தொடர்ந்து, திருமணத்திற்கு பின்பு சில மாதங்களில் இளவர் மனுதாரர்/வாதியின் தாயாரான இறந்து போன நித்யா ஒரு மனைவியாகவும் மற்றும் நல்ல மருமகளாகவும் பிரதிவாதியின் குடும்பத்துடன் அன்புடனும், பிரியத்துடனும் ஒரு குடும்ப மனைவியாக செய்ய வேண்டிய அனைத்து கடமைகளையும் நல்ல முறையில் செய்து வந்துள்ளார் என்றும், இருந்த போதிலும் பிரதிவாதி வரதட்சணை கேட்டு கொடுமை செய்துள்ளார் என்றும், மேலும், இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் இறந்து போன நித்யாவிற்கு எங்கள் தரப்பில் செய்த சீர்வரிசைகள் மற்றும் நகைகள் பிரதிவாதி வசம் உள்ளது என்றும், மேற்படி வரதட்சனை கேட்டதின் பேரில் பிரதிவாதி மீது, இளவர் மனுதாரர்/வாதியின் தாயாரான இறந்து போன நித்யா காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றும், அதன்பின்னர், மீண்டும் இளவர் மனுதாரர்/வாதியின் தாயாரான இறந்துபோன நித்யாவை பிரதிவாதி வரதட்சனை கேட்டு கொடுமை செய்ததில் (Dowry Harrassment. Cruelty & For Criminal Breach of Trust etc.,) ஆகிய குற்றங்களில் கொடுத்த புகாரின் பேரில் பழனி அனைத்து மகளிர் காவல் நிலையம் குற்ற எண்.12/2019-ல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 498(A), 406, 294(b) மற்றும் 506(1) -ன் கீழ் எனது பிரதிவாதி மற்றும் அவரது தாயார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு தற்போது பழனி மாண்பமை

குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் C.C. No.44/2020 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.3. அதனைத் தொடர்ந்து இளவர் மனுதாரர்/வாதியின் தாயாரான இறந்துபோன நித்யாவை, பிரதிவாதி தனக்கு முன்பே திருமணம் நடைபெற்றிருந்ததை மறைத்து இளவர் மனுதாரர்/வாதியின் தாயாரை திருமணம் செய்த விபரம் 27.06.2019 ஆம் தேதிக்குப் பின்னரே இளவர் மனுதாரர்/வாதியின் தாயாருக்கும், எங்களுக்கும் தெரியவந்தது என்றும், மேற்படி இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் இறந்துபோன நித்யாவின் நகை, பணம், வரதட்ணை ஆகியவற்றிற்காக அவரை ஏமாற்றி திருமணம் செய்துள்ள விபரம் எங்கள் குடும்பத்திற்கு தெரியவந்தது என்றும், இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் இறந்துபோன நித்யா, பிரதிவாதி மீது முதல் திருமணத்தை மறைத்து தன்னை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டதின் பேரில் புகார் கொடுக்கப்பட்டிருந்த நிலையில் இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் மார்பக புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு கடந்த 02.01.2024 ஆம் தேதி கோவை KMCH-ல் மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்றும், மேற்படி சிகிச்சையில் இருந்த இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் உடல்நலக்குறைவு ஏற்பட்டு இறந்துவிட்டதால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய இயலாமல் போய்விட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.4. அதனைத் தொடர்ந்து, இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் இறந்த தேதி முதல் நாளது தேதிவரை இளவர் மனுதாரர்/வாதி என்னுடைய பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் இருந்து வருகிறார் என்றும், மேற்படி பிரதிவாதி, இளவர் மனுதாரர்/வாதி பிறந்த தேதி முதல் நாளது தேதிவரை தந்தை என்ற முறையில் எந்தவொரு கடமையையும் இளவர் மனுதாரர்/வாதிக்குச் செய்யவில்லை என்றும், ஆனால், பிரதிவாதி இளவர் மனுதாரர்/வாதியின் தாயாருடைய பணபலன்களை அடைவதிலேயே தீவிரமாக உள்ளார்கள் என்றும், இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் இறந்து போன நித்யாவிற்கு இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 15–ன் படி இளவர் மனுதாரர்/வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு ஆவார் என்றும், மேற்படி பிரதிவாதி இறந்து போன நித்யாவின் சட்டப்படியான கணவர் என்ற முறையில் எந்தவொரு உரிமையும் கோரமுடியாது என்றும், ஏனெனில் பிரதிவாதியின் திருமணம் சட்டத்தின் பார்வையில் செல்லாத திருமணம் ஆகும் என்றும், இந்து திருமண சட்டம் 1955 ன் படி எனது தாயார்

இறந்துபோன நித்யா மற்றும் பிரதிவாதிக்கு நடைபெற்ற திருமணம் சட்டப்படி செல்லாத திருமணம் என்பதால் இளவர் மட்டுமே தனது தாயார் இறந்து போன நித்யாவிற்கு சட்டப்படியான வாரிசு ஆவார் என்றும், இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956-ன் படி பிரதிவாதி சட்டப்படியான வாரிசாக இருக்க முடியாது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.5. அதனைத் தொடர்ந்து, மனுதாரருக்கு வயதாகிவிட்ட காரணத்தினால் இளவர் மனுதாரர்/வாதியை வளர்ப்பதில் மிகுந்த சிரமத்திலும், அதே போல் இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் இறந்து போன நித்யா LIC HFL திண்டுக்கலில் மனுதாரரது கணவர் கருப்புச்சாமி பெயரில் உள்ள வீட்டை அடைமானம் வைத்து ரூ.18,00,000/- (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்) இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் இறந்துபோன நித்யாவின் பெயரில் பெற்ற கடனை திரும்ப செலுத்த இயலாமல் மிகுந்த கஷ்ட சூழ்நிலையில் இருந்து வருகிறேன் என்றும், மேற்படி பிரதிவாதி தனது முதல் திருமணம் நடைமுறையில் இருந்த போது இரண்டாவதாக மேற்படி இறந்து போன நித்யாவை திருமணம் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல (Null and Void) ஆகும் என்றும், மேற்படி இளவர் மனுதாரர்/வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை வழங்ககோரி மாண்பமை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

## 3. எதிர்மனுதார் /பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம் :-

3.1. எதிர்மனுதாரர், மனுதாரரின் மனு பொய்யானது என்றும், அடிப்படை ஆதாரமற்றது என்றும் சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரருக்கு இம்மனுவில் கண்டுள்ள சங்கதிகளை முழுதாக நிரூபிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் உள்ளது என்றும், எதிர்மனுதாரர் இதன் கீழ் உண்மையென ஒப்புக் கொள்கிற சங்கதிகளைத் தவிர மற்ற அனைத்தையும் பொய்யானவை என மறுக்கிறார் என்றும், இவ்வழக்கில் இளவர் மனுதாரராக எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படியும் நியாயப்படியும் எதிரானது என்றும், இளவர் மனுதாரருக்கு வழக்கின் தன்மைக் குறித்தோ அல்லது எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்ற தேவையோ அல்லது அதற்கான காரணமோ எதுவும் இல்லை என்றும், இயற்கைப் பாதுகாவலராகிய எதிர்மனுதாரருக்கு எதிராக

இளவர் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்கின்ற அவசியமோ, நியாயமோ எதுவும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2. அதனைத் தொடர்ந்து, இம்மனுவானது மனுதாரரின் நலன் விரும்பியோ அல்லது அவரின் எதிர்கால நலனை முன்னிட்டோ தாக்கல் செய்யப்பட்டது அல்ல என்றும், இம்மனுவால் மனுதாரருக்கு எந்த நன்மையோ அல்லது பாதுகாப்போ ஏற்படப்போவதில்லை என்றும், இம்மனுவானது முற்றிலும் இளவர் மனுதாரரின் எதிர்கால நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் தவறான கண்ணோட்டம், தவறான ஆதாயம் அடையும் நோக்கத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவில் கண்டுள்ள சங்கதிகளான மனுதாரரின் தாயார் நித்யாவுக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 29.11.2017 ஆம் தேதி அன்று திருமணம் நடைபெற்றதாக கூறுவது உண்மையல்ல என்றும், ஆனால் , நித்யா மற்றும் எதிர்மனுதாரர் இருவரின் திருமண பந்தத்தின் பயனாக மனுதாரர் 15.02.2019 ஆம் தேதி அன்று பிறந்தார் என்பது உண்மை என்றும், மேலும், நித்யா மற்றும் எதிர்மனுதாரருக்கு இடையே நடந்த திருமணத்திற்கு பின்னிட்டு அன்புடன் வாழ்க்கை நடத்தி வந்தார்கள் என்பது உண்மை என்றும், ஆனால், எதிர்மனுதாரர் நித்யாவை வரதட்சனை கேட்டு கொடுமை செய்தார் என்பது அப்பட்டமான பொய்யாகும், என்றும் கூறப்பட்டுள்ளது.

3.3. அதனை தொடர்ந்து, நித்யாவின் திருமணத்தின் போது அவரது வீட்டார் எவ்வித சீர்வரிசை, நகைகளை கொடுக்கவில்லை என்றும், அது போன்ற எந்த சீர்வரிசை, நகைகள் எதிர்மனுதாரரிடம் இல்லை என்றும், ஆனால், எதிர்மனுதாரருக்கு எதிராக நித்யாவை அவரின் தாயார் மற்றும் குடும்பத்தினர் தவறான ஆதாயம் அடையும் நோக்கிலும், நித்யாவின் வருமானத்தில் குடும்பத்தை நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் பல்வேறு வகையில் அவரைத் தவறாக தூண்டிவிட்டு எதிர்மனுதாரருக்கு எதிராக, ஒரு பொய்யான, அடிப்படை ஆதாரமற்ற ஒரு புகாரை பழனி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்தும், மேலும், எதிர்மனுதாரருக்கு எதிராக தங்கள் செல்வாக்கினைப் பயன்படுத்தியும் குற்ற வழக்கு எண்.12/2019—ல் ஒரு வழக்கும் தாக்கல் செய்தார்கள் என்றும், அது பழனி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும், அந்த வழக்கு எந்த இறுதி நிலையை எட்டவில்லை என்றும், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில்

தன் மீது போடப்பட்ட வழக்கினை முறைப்படி நடத்தி தான் அப்பாவி என்பதையும், இந்த வழக்கானது எதிர்மனுதாரருக்கு எதிராக திட்டமிட்டு போடப்பட்ட பொய் வழக்கு என்பதையும் எதிர்காலத்தில் நிரூபிக்கிற எல்லா வகையான வாய்ப்பும், வசதியும் எதிர்மனுதாரருக்கு உள்ளது என்றும், எதிர்மனுதாரர் மனுவின் உறுதிமொழி பத்தி 6–ல் கண்டுள்ள சங்கதிகளை மறுக்கிறார் என்றும், இறந்து போன நித்தியாவை எதிர்மனுதாரர் தனக்கு முன்பே நடந்த திருமணத்தை மறைத்து, கடந்த 29.11.2017 அன்று திருமணம் செய்தார் என்பது பொய்யாகும் என்றும், எதிர்மனுதாரருக்கு முன்பே திருமணம் நடந்து, எதிர்மனுதாரர் அந்த திருமணத்தின் பொருட்டு மனமுறிவு வேண்டி வழக்கு தாக்கல் செய்து, மணமுறிவுக்காக வழக்கு நடத்தி வந்த விபரம் இறந்து போன நித்தியாவுக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி மணமுறிவு வழக்கில் எதிர்மனுதாரருக்கு மணமுறிவு பெறுவதற்கு எதிர்மனுதாரரின் தோழியாக நித்தியாவுக்கு உடனிருந்த உதவி செய்து வந்தார் என்பதே உண்மையாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.4. அதனைத் தொடர்ந்து, எதிர்மனுதாரர் மணமுறிவுக்கு பின்பே நித்தியாவை திருமணம் செய்தார் என்றும், மேற்படி இறந்து போன நித்தியாவை எதிர்மனுதாரர் எந்த வகையிலும் ஏமாற்றவில்லை என்றும், முதல் திருமணத்தை மறைத்து இரண்டாம் திருமணம் செய்யவில்லை என்றும், மேற்படி மனுவில் கண்டுள்ள கூற்றுகள் அனைத்தும் கற்பனையானவை என்றும், எதிர்மனுதாரருடன் நித்தியா சேர்ந்து வாழ்ந்ததால், அரசு ஊழியரான நித்தியாவின் பலன் நித்தியாவின் குடும்பத்தாருக்கு கிடைக்காது என்பதற்காக திட்டமிட்டு எதிர்மனுதாரருக்கும், நித்தியாவிற்கும் இடையே பல்வேறு வகையில் நித்தியாவின் தாயார் திருமதி.மாரியம்மாள் மற்றும் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பல்வேறு வகையில் சதியில் ஈடுபட்டு நித்தியாவை எதிர்மனுதாரரிடமிருந்து பிரித்தனர் என்றும், உண்மையில் நித்தியா எதிர்மனுதாரருடன் வாழவே இறுதிவரை விரும்பி முயன்று வந்தார் என்றும், இந்நிலையில் நித்தியா புற்று நோயின் காரணமாக கடந்த 02.01.2024 அன்று இறந்து விட்டார் என்றும் மேற்படி திடீர் மரணத்திற்கு பின்னிட்டு நித்தியாவிற்கு இறுதி மரியாதை செய்தவற்காக எதிர்மனுதாரர் நித்தியாவின் உடல் வைக்கப்பட்டிருந்த அவரது தாயார் மாரியம்மாள் வீட்டிற்கு சென்ற போது மாரியம்மாள் மற்றும் அவரது குடும்பத்தினர் நித்தியாவின் உடலைப் பார்க்க

எதிர்மனுதாரரை அனுமதிக்க மறுத்துவிட்டனர் என்றும், மேலும், இளவர் மனுதாரரின் தந்தை என்ற முறையில் அவரையும் எதிர்மனுதாரரைப் பார்த்திட அனுமதிக்கவும் மறுத்துவிட்டனர் என்றும், இந்நிலையில் இறப்பு நடந்த வீட்டில் இடையூறு செய்யக் கூடாது என்பதற்காக எதிர்மனுதாரர் பழனி காவல்நிலையத்தில் தன்னை நித்தியாவின் இறுதி நிகழ்வில் பங்கெடுக்க அனுமதிக்க வேண்டும் என்று மனுத்தாக்கல் செய்திட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.5. அதனைத் தொடர்ந்து, மனுதாரர் அளித்திட்ட புகாரின் பேரில் பழனி காவல்நிலையத்தில் காவல்துறையினர் திருமதி.மாரியம்மாளையும், அவரது உறவினர்களையும் அழைத்து இறுதி சடங்கில் பங்கேற்க எதிர்மனுதாரரை அனுமதித்திட வலியுறுத்திய போதிலும் மாரியம்மாள் காவல்துறையின் அறிவுறுத்தலை மறுத்து விட்டார் என்றும், எதிர்மனுதாரர் தனது மனைவியான நித்தியாவின் இறுதி சடங்கு இடையூறு இல்லாமல் நடப்பதற்காக திருமதி.மாரியம்மாளின் தடை காரணமாக வேறு வழியின்றி நித்தியாவின் உடலுக்கு இறுதி மரியாதை செய்யாமலேயே எதிர்மனுதாரர் திரும்பினார் என்றும், இளவர் மனுதாரர் மாரியம்மாளின் பாதுகாப்பில், பராமரிப்பில் இருந்து வருகிறார் என்பது சரியல்ல என்றும், மேற்படி இளவர் மனுதாரர் பிறந்த முதல் தந்தை என்ற முறையில் எதிர்மனுதாரர் இளவருக்கு எந்த கடமையும் செய்யவில்லை என்பதும் சரியல்ல என்றும், இறந்து போன நித்தியா தனது கணவரான எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்திட வேண்டும் என்கிற விருப்பத்தில் அவரது தாயார் மாரியம்மாளுக்கும் தெரியாமல் தொடர்ந்து முயற்சி செய்து வந்தார் என்றும், எதிர்மனுதாரருக்கு இறந்து போன நித்தியாவும் இளவர் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு சந்தித்து பேசி முடிவு செய்திருந்தனர் என்றும், அதற்கு நித்தியாவின் தாயார் மாரியம்மாள் பெரும் தடையாக இருந்தார் என்றும், நித்தியா எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்திடக் கூடாது என்பதற்காக மாரியம்மாள் பல்வேறு தடைகளை மேற்கொண்டு வந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.6. அதனைத் தொடர்ந்து இளவர் மனுதாரரை எதிர்மனுதாரரிடம் ஒப்படைக்க கோரி தொடர்ந்து எதிர்மனுதாரர் கேட்டுக் கொண்ட போதும், வலுக்கட்டாயமாகவும், வன்முறையாகவும் இளவர் மனுதாரரை மாரியம்மாள் அவர்கள் தன் வசம் வைத்திருக்கிறார் என்றும், மேற்கண்ட மாரியம்மாளின் செயலானது இளவரின்

எதிர்கால நலனுக்கும், அவரது நன்மைக்கும் ஊறு விளைவிக்கும் செயலாகும் என்றும், மேலும், இந்த செயல் சட்ட விரோதமானது என்றும், மாரியம்மாளுக்கு இளவர் மனுதாரரின் பொருட்டு எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேலும், அரசு ஊழியரான நித்தியாவின் பணப்பலன்களை அடைய அவருக்கு எவ்வித தகுதியும், அருகதையும் இல்லை என்றும், எதிர்மனுதாரர் இறந்து போன நித்தியாவின் பணப்பலன்களை அடைவதில் தீவிரமாக உள்ளார் என்பது அப்பட்டமான பொய்யாகும் என்றும், அது போன்ற எண்ணமும் செயலும் நித்தியாவின் தயார் மாரியம்மாள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு மட்டுமே உண்டு என்றும், அதற்காகத்தான் இந்த வழக்கு எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ,மனுவில் கண்டுளள சங்கதிளான தனது முதல் திருமணம் நடைமுறையில் இருந்த போது இரண்டாவதாக நித்தியாவை எதர்மனுதாரர் திருமணம் செய்தார் என்பது பொய்யானது என்றும், உண்மைக்குப் புறம்பானதாகும் என்றும். மேலும், மேற்படி காரணங்களினால் அந்த திருமணம் செல்லத் தக்கதல்ல என இளவர் மனுதாரர் மூலம் மனுத்தாக்கல் செய்திருப்பது சட்டப்படியும் நியாயப்படியும் எதிரானது என்றும், நித்தியாவின் தாயார் மாரியம்மாள் தொடர்ந்த எதிர்மனுதாரருக்கு எதிராக இது போன்ற பொய்யான செய்திகள் அடங்கிய மனுவினை எதிர்மனுதாரர் பணி செய்யும் கல்வித் துறைக்கு தொடர்ந்து அனுப்பி நெருக்கடி கொடுத்து வருகிறார் என்றும், நித்தியா உயிரோடிருந்த போது மேற்படி நித்தியாவிற்கும் எதிர்மனுதாரருக்கும்த நடைபெற்ற திருமணம் செல்லத்தக்கதல்ல என எந்தவித விளம்புகை பரிகாரம் வேண்டிய வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றும் இந்நிலையில் இம்மனுவில் அது போன்ற ஒரு கூற்றை வெளிப்படுத்த எவருக்கும் அருகதை இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

3.7. அதனைத் தொடர்ந்து, இளவர் மனுதாரரை எதிர்மனுதாரர் எப்போதும் பராமரித்து பாதுகாக்க தயாராக உள்ளார் என்றும், அவரை தனது பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இருக்கக் கோரி பல்வேறு சமயங்களில், பல்வேறு வகையில் உறவினர்கள், நண்பர்கள் மூலமாக நித்தியாவின் தாயார் மற்றும் உறவினர்களின் எதிர்மனுதாரர் வலியுறுத்தி வந்தார் என்றும், ஆனால் நித்தியாவின் தாயார், குடும்பத்தினர் வன்முறையின் அடிப்படையில் இளவர் மனுதாரரை தங்கள் வசம் வைத்துள்ளார் என்றும், இந்த செயலானது இளவரின் நலன் மற்றும் எதிர்காலத்திற்கும்

ஊறு விளைவிக்கக் கூடியது என்றும், எதிர்மனுதாரர் அரசு வேலையில் உள்ளார் என்றும், அவர் நித்தியாவின் மறைவிற்கு பின்னர் வேறு எந்த திருமணமும் செய்யாமல் வாழ்ந்து வருகிறார் என்றும், இளவர் மனுதாரரைப் பராமரித்து பாதுகாக்கவும், அவரிடம் அன்பு, பாசம், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு நிலை சேர்ந்து உள்ளது என்றும், இந்நிலையில் போதிய வசதியும் சட்டப்படியாக எவ்வித உரிமையும் இல்லாத மாரியம்மாளின் பாதுகாப்பில் இளவர் கபிலரசு இருப்பதென்பது அவரின் எதிர்காலத்திற்கும், வாழ்க்கைக்கும் பாதுகபாப்பானது அல்ல என்றும், இயற்கைப் பாதுகாவலரான எதிர்மனுதாரருக்கு எதிராக இளவரை வைத்து மாரியம்மாள் மூலமாக இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றும், ஏனெனில் இந்து இளவர் மற்றும் பாதுகாவலர் சட்டம்1956–ன் படி எதிர்மனுதாரர்தான் இளவர் மனுதாரரின் தந்தை என்ற முறையில் சட்டப்படியான இயற்கையான பாதுகாவலர் ஆவார் என்றும், எதிர்மனுதாரர் நல்ல குடும்பஸ்தராக ஆசிரிய பணி செய்து பொறுப்புள்ள மனிதராக இந்து சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்து வருகிறார் என்றும், எனவே, இளவர் மனுதாரரின் தந்தையாகிய எதிர்மனுதாரர் மட்டுமே இளவர் மனுதாரரின் சட்டப்படியான பாதுகாவலராக இருந்து கடமை புரிய ஏற்றவர் ஆவார் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.8. அதனைத் தொடர்ந்து இந்து இளவர் மற்றும் பாதுகாவலர் சட்டம் 1956–ன் படி இயற்கை பாதுகாவலர் இல்லாமல் வேறு ஒருவரை இளவர் மனுதாரருக்கு பாதுகாவலாக நியமிக்கும் அதிகாரம் மேற்படி சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற மாவட்ட நீதிமன்றத்தின் ஆட்சி எல்லைக்குள் மட்டுமே வரும் என்றும், இந்நிலையில் இந்த வழக்கானது சமூகம் நீதிமன்றத்தில் ஆள்வரைக்குள் வராது என்றும், இவ்வழக்கானது அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எந்த முகாந்திரமும் இளவர் பாதுகாவலர் என அறிவித்துக் கொண்டு இறந்து போன நித்தியாவின் தயார் மாரியம்மாள் இளவர் பெயரில் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்நிலையில் சமூகம் நீதிமன்றம் எதிர்மனுதாரர் இயற்கை பாதுகாவலாக இருக்கின்ற போது அவருக்கு எதிராக இளவர் கபிலரசுக்கு பாதுகாவலராக மாரியம்மாள் என்பரையோ அல்லது நீதிமன்றத்தின் மூலம் நியமிக்கப்படும் ஒருவரையோ அல்லது வேறு யாரையோ காப்பாளராக நியமனம் செய்வது என்பது நிலைக்கத்தக்கதல்ல என்றும், அது இந்து இளவர் மற்றும் பாதுகாவல் சட்டம்,

1956–ன் சட்டத்தின் சரத்துக்களும் முற்றிலும் மாறானது என்றும், அப்பட்டமான சட்ட மீறலாகும் என்றும், மனுதாரரின் மேற்படி மனுவினை எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள உண்மைகள், சட்டத்தின் அடிப்படையில் மாண்பமை நீதிமன்றம் தள்ளுபடி செய்வது அவசியமானதாகும் என்றும், இல்லாத பட்சத்தில் எதிர்மனுதாரர் சொல்லாவண்ணத் துயருக்கும் ஈடு செய்ய முடியாத இழப்புக்கும் ஆளாவார் என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கில் அவசியம் ஏற்பட்டால் கூடுதல் எதிருரை தாக்கல் செய்திடும் உரிமையை நிலைநிறுத்திக் கொள்கிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், "மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா என்பது ஆகும்."

**6. தீர்வு:–**

6.1. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில், மாண்பமை உச்சநீதிமன்றம் உரிமையியல் மேல்முறையீட்டு எண்.22969/2017–ல்

" There is no hurdle for a natural guardian or duly constituted guardian as defined under Hindu Guardianship Act to represent minor plaintiff or defendant in a law suit. But such guardian should not haved adverse interest against minor. If the natural guardian or the duly constituted guadian has adverse interest against the minor in the law suit then a next friend or guardian ad litem, as the case may be, would represent the minor in the civil litigation" **என்றும்** " It is by now well settled and as per the provisions of Order XXXII of code that any person who is of sound mind, who has attained majority who can represent and protect the interest of the minor, who is a resident of India and whose interest is not adverse to that of the minor, may represent the minor as his next friend. Such person who is presenting the minor plaintiff as a next friend shall not be party to the same suit as defendant. Rules 6 and 7 of Order XXXII of the code specifically provide that the next friend or guardian in the suit shall not without the leave of the Court receive any money or immovable property and shall not without the leave of the court enter into any agreement or compromise. The rights and restrictions of the natural guardian provided under the Hindu

Guardianship Act do not conflic with the procedure for filing a suit by a next friend on behalf of the minor" **என்றும்,** " Before a minor commences suit, a conscious decision is made concerning the deserving adult (next friend) through whom the suit will be instituted. The guardian ad litem is appointed by Court and whereas the next friend is not. The next friend and the guardian ad litem possess similar powers and responsibilities. Both are subject to control by the Court and may be removed by the Court if the best interest of the minor so requires." **என்றும் கூறப்பட்டுள்ளதை மேற்கோள் காட்டி வாதிடப்பட்டது.**

**6.2. மேலும், இளவர் மனுதாரர்/வாதியின் தாயார் இறந்த தேதி முதல் நாளது தேதிவரை இளவர் மனுதாரர்/வாதி என்னுடைய பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் இருந்து வருகிறார் என்றும், மேற்படி பிரதிவாதி, இளவர் மனுதாரர்/வாதி பிறந்த தேதி முதல் நாளது தேதிவரை தந்தை என்ற முறையில் எந்தவொரு கடமையையும் இளவர் மனுதாரர்/வாதிக்கு செய்யவில்லை என்றும், பிரதிவாதி தனது முதல் திருமணம் நடைமுறையில் இருந்த போது இரண்டாவதாக மேற்படி இறந்து போன நித்யாவை திருமணம் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல** (Null and Void) **ஆகும் என்றும், மேற்படி இளவர் மனுதாரர்/வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை வழங்ககோரி மாண்பமை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் இளவர் மனுதாரர்/வாதி கபிலரசு 5 வயதுள்ள இளவர் என்பதால் அவரை பராமரித்து வரும் அவரது பாட்டியான மாரியம்மாள் என்பவரையோ அல்லது ஒரு நீதிமன்றம் மூலம் நியமனம் பெற்றவரையோ இளவருக்கு அடுத்த சிநேகிதியாக நியமனம் செய்ய உத்திரவிடக்கோரி வாதிடப்பட்டது.**

**6.3. எதிர்மனுதாரர் தரப்பில், மாண்பமை கேரள உயர்நீதிமன்றம் Essakkyal Nadar Michayel Nadar Vs Sreedharan Babu And Ors. On 5 june, 1991 (AIR 1992 KER 200)**

"Section 6 of the Hindu Minority and Guardianship Act, 1956 (for short, the Act) provides that the natural guardian of a Hindu minor in respect of the minor's person as well as in respect of the minor's property (excluding his or her undivided interest in joint family property) is his father in the case of a boy or an unmarried girl and after him the mother. Father of a minor who is the natural guardian continues to be so unless he has ceased to be a Hindi or renounced the world. After commencement of the Act the question as to who is the natural guardian has to be determined as per the provisions of the Act and not according to Hindu Law before it was codified. Section 6 makes

the position clear that so long as the father is alive the mother cannot be the natural guardian of the minor" **என்றும்,** " As plaintiffs' father was admittedly alive and as there is no case that he has ceased to be a Hindu or renounced the world, it has to be held that he continued to be the natural guardian of his minor children. Merely because he was not residing with the plaintiffs he did not cease to be the natural guardian. The natural guardian ceases to be so only under the two grounds mentioned in the proviso to Section 6. The proviso makes the position clear that no person shall be entitled to act as the natural guardian of a minor if he has ceased to be a Hindu or if he has completely and finally renounced the world by becoming a hermit (vanaprastha) or an ascetic (yati or sanyasi) **என்றும், மேலும், மாண்பமை உயர் நீதிமன்றம் Balasubramanian(minor) By His Vs Tinnevally District, Permenent Fund...on 24 November,1958. (AIR 1959 MAD 429) என்ற வழக்கில்**

" The Mother was the original guardian of the minor but she was removed on an application made by the maternal grandfather. The person who made the present application once before tried to remove the maternal grandfather and get himself appointed as guardian instead, but his attempt failed and the Court refused to bring him on record as the guardian of the minor. The learned judge has held that the application was not maintainable because the maternal grandfather could not file the application on behalf of the minor because he was not the gaurdian ad litem." " Until this is done, a person merely alleging that he has interest in the minor cannot be allowed to file any application on behalf of the minor". **என்றும் கூறப்பட்டுள்ளதை மேற்கோள் காட்டி வாதிடப்பட்டது.**

**6.4. மேலும் இந்து இளவர் மற்றும் பாதுகாவலர் சட்டம் 1956–ன் படி இயற்கை பாதுகாவலர் இல்லாமல் வேறு ஒருவரை இளவர் மனுதாரருக்கு பாதுகாவலாக நியமிக்கும் அதிகாரம் மேற்படி சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற மாவட்ட நீதிமன்றத்தின் ஆட்சி எல்லைக்குள் மட்டுமே வரும் என்றும், எதிர்மனுதாரர் இயற்கை பாதுகாவலாக இருக்கின்ற போது அவருக்கு எதிராக இளவர் கபிலரசுக்கு பாதுகாவலராக மாரியம்மாள் என்பரையோ அல்லது நீதிமன்றத்தின் மூலம் நியமிக்கப்படும் ஒருவரையோ அல்லது வேறு யாரையோ காப்பாளராக நியமனம் செய்வது என்பது நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.**

6.5. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கானது இளவர் கபிலரசுவின் தந்தையான பிரதிவாதிக்கு எதிராக 5 வயதுடைய இளவர் கபிலரசு மட்டுமே இறந்துபோன இளவரின் தாயாரான நித்யா என்பவருக்கு வாரிசு என்று விளம்புகை செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவானது வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் இளவர் மனுதாரர்/வாதி கபிலரசு 5 வயதுள்ள இளவர் என்பதால் அவரை பராமரித்து வரும் அவரது பாட்டியான மாரியம்மாள் என்பவரையோ அல்லது ஒரு நீதிமன்றம் மூலம் நியமனம் பெற்றவரையோ இளவருக்கு அடுத்த நண்பராக நியமனம் செய்ய உத்திரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.6. பொதுவாக சட்டப்படி இளவர் தாக்கல் செய்யும் வழக்கானது இளவரின் அடுத்த நண்பர் மூலமாகத் தான் தாக்கல் செய்ய வேண்டும். இறந்து போன நித்யா என்பவருக்கும், எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட திருமணத்தின் பயனாக கடந்த 15.02.2019 ஆம் தேதியன்று பிறந்தவர் இளவர் கபிலரசு என்று இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவ்வழக்கில் இளவரின் தாயாரான நித்யா கடந்த 02.01.2024 ஆம் தேதி உடல்நலக்குறைவால் இறந்துவிட்டார் என்பதையும், மனுதாரரான மாரியம்மாள் என்பவர் இளவரின் தாய் வழி பாட்டி என்பதையும், இளவரின் தாயார் இறந்த தேதி முதல் நாளது தேதிவரை இளவர் மனுதாரரின் பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் இருந்து வருகிறார் என்பதையும் அறிய முடிகிறது. மேற்படி மனுவின் பரிகாரத்தில் இளவர் மனுதாரர்/வாதி கபிலரசு 5 வயதுள்ள இளவர் என்பதால் அவரை பராமரித்து வரும் பாட்டியும் அடுத்த சிநேகிதியுமான மாரியம்மாள் என்பவரை அல்லது ஒரு நீதிமன்றம் மூலம் பெற்றவரையோ காப்பாளராக நியமனம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்ததை மனுதாரர் தரப்பில் ஒரு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மாரியம்மாள் என்பவரை அல்லது ஒரு நீதிமன்றம் மூலம் பெற்றவரையோ காப்பாளராக நியமனம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதை நீக்கி விட்டு மாரியம்மாள் என்பவரை அல்லது ஒரு நீதிமன்றம் மூலம் பெற்றவரையோ இளவரின் அடுத்த சிநேகிதியாக நியமனம் செய்ய வேண்டும் என்ற பரிகாரத்தை பொறுத்து மட்டும் தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று மேற்படி குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி

1ல் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது இளவர் வழக்கு தாக்கல் செய்வதற்கு அடுத்த நண்பரை நியமனம் செய்வதற்கே ஆகும். மேலும் "அடுத்த நண்பர்" என்பவர் இந்து, இளவர் மற்றும் பாதுகாவலர் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள "கார்டியன்" என்ற வரையறைக்குள் வர வேண்டும் என்ற அவசியமில்லை. மேலும் பிரதிவாதி தரப்பில் இயற்கை பாதுகாவலராகிய இளவரின் தந்தை உயிருடன் இருக்கும் போது இளவரின் தாய்வழி பாட்டி இளவர் சார்பாக இவ்வழக்கு தொடுக்க முடியாது என்றும், இளவரின் நலனில் அக்கறை எடுத்துக்கொள்ளாதவர் அடுத்த நண்பராக செயல்பட முடியாது என்று வாதிடப்பட்ட நிலையில், சட்டப்படி இளவரின் தாயாராகிய நித்யா என்பவர் தற்போது உயிருடன் இல்லை என்பதால், அசல் வழக்கில் இயற்கை பாதுகாவலராகிய இளவரின் தந்தை இளவர் தாக்கல் செய்த வழக்கில் பிரதிவாதியாக இருக்கும் சமயத்தில் இளவரின் நலனில் அக்கறைக் கொண்ட நபரையோ, அல்லது நீதிமன்றம் மூலம் நியமனம் செய்யும் நபரையோ தான் இளவரின் அடுத்த நண்பராக நியமனம் செய்ய முடியும். எனவே தற்போது இளவர் தனது பாட்டியாகிய மாரியம்மாள் என்பவரின் பாதுகாப்பில் உள்ள நிலையில் இளவரின் பாட்டியாகிய மாரியம்மாள் என்பவரை இளவரின் அடுத்த நண்பராக நியமனம் செய்வது, இளவர் தாக்கல் செய்த வழக்கை மேல் நடத்துவதற்கே என்பதால் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவது இளவரின் இயற்கை பாதுகாவலராகிய எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதகமும் விளைவிக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,** இம்மனுவின் பொருண்மை மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் இளவர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கை நடத்துவதற்கு மனுதாரரும் இளவரின் பாட்டியுமான மாரியம்மாள் என்பவரை இளவரின் அடுத்த நண்பராக நியமித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து கணினியில் நேரடியாக பிழை நீக்கம் செய்யப்பட்டு 24.06.2025 ஆம் தேதியாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-சு.அபூர்வா,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**

**மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:-** இல்லை.

**மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-**இல்லை.

**எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி:-** இல்லை.

**எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-**இல்லை.

**ஒம்/-சு.அபூர்வா,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**